## September 17, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

*1. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (இபிஎஃப்) கண்டிப்பாக பிடித்தம் செய்ய வேண்டிய மாத ஊதிய வரம்பை ரூ.15,000-இல் இருந்து ரூ.25,000 ஆக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.*

*(i) தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதன்மூலம் கூடுதலாக 51 லட்சம் மாத ஊதியதாரர்கள் பயன் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*2. புதிய கனிமவளங்களை கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசுக்கு நீதி ஆயோக் அமைப்பு ஆலோசனை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அந்த அமைப்பின் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:*

*(i) புதிய கனிம வளங்களைக் கண்டுபிடிக்கும் பணிகளை விரைவு படுத்துவதற்கு புவியியல் தகவல்கள், முதலீட்டு நிதி, அரசு நிதியுதவி ஆகியவை சிறிய கனிம ஆய்வு நிறுவனங்களுக்கு எளிதாக கிடைக்க வேண்டும். இதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும்,கனிம ஆய்வுப் பணிகளில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும்.*

*(ii) ஏற்கெனவே உள்ள திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு தெளிவான விதிமுறைகளை உருவாக்க வேண்டும். இதன்மூலம் திட்டங்கள் தாமதமாவதைத் தடுக்க முடியும்.*

*(iii) விமானத் தயாரிப்புக்குத் தேவையான உயர்தர உலோக எஃகுகள், சாதாரண உலோகங்களைவிட அதிக வெப்பத்தையும் அழுத்தத்தையும் தாங்கக் கூடிய சிறப்பு உலோகங்கள், அலுமினியம் டைட்டானியம் உலோகங்கள் ஆகியவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*3. வடகிழக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் தங்கச் சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததில் 67 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருப்பதால், உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.*

*(i) சூடான் நாட்டின், மேற்கு கோர்டோஃபான் மாகாணத்தில் உள்ள நுஹூத் நகரில் செயல்பட்டு வரும் அல்-ஜரா தங்கச் சுரங்கம், நள்ளிரவில் திடீரென இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் சுரங்கத்துக்குள் இருந்தவர்கள் அனைவரும் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். அவர்களைத் தேடும் மற்றும் மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.*

*(ii) விபத்து நிகழ்ந்த பகுதியானது, சூடானின் அதிகாரபூர்வ ராணுவத்துடன் கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வரும் 'ஆர்எஸ்எஃப்' துணை ராணுவப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.*

*4. ஐரோப்பிய யூனியனின் முதல் இணை உறுப்பினராக இணையுமாறு கனடாவுக்கு ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் அழைப்பு விடுத்துள்ளார்.*

*(i) பிரான்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், சிறப்பு விருந்தினராக பங்கேற்ற கனடா பிரதமர் மார்க் கார்னியின் முன்னிலையில், யூனியனின் ஆண்டு நிலை குறித்து உரையாற்றியபோது உர்சுலா வான் டெர்லேயன் இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.*

*5. 46-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி, உஸ்பெகிஸ்தானின் சாமர்கண்ட் நகரில் தொடங்கியது. இதில் ஓபன் பிரிவில் 208 அணிகளும், மகளிர் பிரிவில் 191 அணிகளும் பங்கேற்றுள்ளன.*

*6. முதுபெரும் கன்னட நடிகர் அனந்த் நாக்குக்கு 2024-ஆம் ஆண்டுக்கான தாதா சாஹேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.*

*(i) கன்னடம் மற்றும் ஹிந்தி திரைப்படங்களில் அவரது சிறப்பான பங்களிப்பைப் பாராட்டி இந்த விருது அளிக்கப்படவுள்ளது. 78 வயதாகும் அனந்த் நாக் கடந்த 50 ஆண்டுகளில் பல்வேறு மொழிகளில் 250–க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். குஜராத்தில் வரும் 22-ஆம் தேதி நடைபெறும் தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் நிகழ்வில் அவருக்கு பால்கே விருது வழங்கப்பட இருக்கிறது.*

*(ii) கடந்த ஆண்டு மளையாள நடிகர் மோகன் லாலுக்கு பால்கே விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

*(iii) இந்திய திரைத்துறையின் தந்தையாக புகழப்படும் தாதா சாஹேப் பால்கே பெயரில் 1969-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் இந்த விருது, இந்திய திரைத் துறையில் உயரிய கௌரவமாகும்.*

*7. மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தை மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது.*

*(i) மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தின் நிர்வாக குழுக் கூட்டம் கடந்த 6 ஆண்டுகளில் முதல்முறையாக கடந்த ஆகஸ்ட் மாதம் 29-ஆம் தேதி நடைபெற்றது. ஆனால் விதிப்படி அந்த வாரியத்தின் நிர்வாகக் குழு கூட்டம் நான்கு மாதங்களுக்கு ஒருமுறையாவது நடைபெற வேண்டும். ஆனால் விதிப்படி கூட்டம் நடத்தப்படாதது தொடர்பான தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சூழ்நிலையில், 6 ஆண்டுகளுக்கு பிறகு மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தை மத்திய அரசு மாற்றியமைத்தது.*

*(ii) புதிய வாரியத்துக்கு பிரசார்பாரதியின் முன்னாள் தலைமை செயல் அதிகாரியான சசிசேகர் வேம்பட்டியை தலைவராக மத்திய அரசு நியமித்துள்ளது.*

*(iii) மத்திய திரைப்பட வேம்பட்டி தணிக்கை வாரியத்தின் உறுப்பினர்களாக திரைப்பட இயக்குநர் பிரிய தர்ஷன், நடிகை ப்ரீத்தி ஜிந்தா, நடிகர் பங்கஜ் திரிபாதி, நடிகர் சுனில் ஷெட்டி, நடிகை பல்லவி ஜோஷி, கிராமி விருது வென்ற இசையமைப்பாளர் ரிக்கி கெஜ், திரைப்பட விமர்சகர் வினோத் அனுபம், நடிகர் மனோஜ் ஜோஷி, திரைப்பட இயக்குநர் அபிஷேக் ஜெயின், பாடகரும் முன்னாள் எம்.பி.யுமான ஹான்ஸ்ராஜ் ஹான்ஸ், தயாரிப்பாளர் சுப்ரியா யார்லகட்டா, கவிஞரும் எழுத்தாளருமான யதிந்திர மிஸ்ரா, நடிகை ரூபாலி கங்குலி, இயக்குநர் நிலா மதாப் பான்டா, நடிகர் நிஷிகந்தா வாட் உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே உறுப்பினர்களாக இருந்த வாமன் கெந்த்ரே, ஆர்எஸ்எஸ் பிரசாரகர் ரமேஷ்பதாங்கே ஆகியோர் மீண்டும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*(iv) மத்திய திரைப்பட தணிக்கை வாரியம் கடைசியாக கடந்த 2017- ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. நடிகைகள் வித்யா பாலன், ஜீவிதா ராஜசேகர், கௌதமி தாடி மல்லா உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டனர். பதவிக்காலம் 2020-ஆம் ஆண்டு வரை மட்டுமே இருந்த போதிலும், அதன்பிறகும் அந்தவாரியம் பதவி வகித்தது.*

*(v) ஏனெனில் புதிய நிர்வாகிகள் மத்திய அரசால் நியமிக்கப்படும் வரை அவர்கள் தொடர்ந்து பதவி வகிக்க விதிகளில் வழிவகை செய்யப்பட்டிருந்தது.*

*8. இந்தியா- நியூசிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கு நியூசிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.*

*(i) கடந்த ஆண்டு ஏப்ரல் 27- இல் இந்தியா-நியூசிலாந்து தடைற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமானது.*

*(ii) இந்த ஒப்பந்தம் மூலம் ஜவுளி, தோல் காலணிகள், ரத்தினங்கள், ஆபரணங்கள் உள்ளிட்டவற்றை இந்தியாவில் இருந்து நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்ய 100 சதவீதம் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

*(iii) இந்த ஒப்பந்தம் குறித்து நியூ சிலாந்து பிரதமர் கிறிஸ்டோஃபர் லக்ஸன் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டபதிவு:*

- *இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வது சாத்தியமில்லை என்று பலரும் என்னிடம் கூறினர். ஆனால் அந்த ஒப்பந்தத்துக்கு நியூசிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.*
- *இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் நியூசிலாந்து மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளையும், அதிக வருமானத்தையும் உருவாக்கும். இந்த ஒப்பந்தம் 140 கோடி இந்திய நுகர்வோருக்கு நியூ சிலாந்து பொருள்களை விற்பனை செய்யும் வாய்ப்பை அளித்துள்ளது. இதன்மூலம், இந்தியாவில் நியூசிலாந்து பொருள்கள் மேலும் அதிகமாக விற்பனையாகும் என்று தெரிவித்தார்.*

*9. ஆண் பெண் பாலின இடைவெளி குறியீட்டில் உலக அளவில் இந்தியா தொடர்ந்து 131-ஆவது இடத்தில் நீடிக்கிறது.*

*(i) பாலின இடைவெளி குறியீடு என்பது ஆண்கள், பெண்களுக்கு இடையேயான சமநிலையை அல்லது இடைவெளியை குறிப்பதாகும். இதை சுவிட்சர்லாந்தை தலைமையிடமாக கொண்டு உலக பொருளாதார மன்றம் ஆண்டு தோறும் வெளியிடும். அதன்படி தற்போது உலக பொருளாதார மன்றம் 2026-ஆம் ஆண்டுக்கான பட்டியலை வெளியிட்டுள்ளது.*

*(ii) அந்தப் பட்டியலில், மொத்தம் 145 -நாடுகள் ஆண், பெண் பாலின இடைவெளி குறியீட்டை அடிப்படையாக வைத்து வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் ஐரோப்பிய நாடுகளான ஐஸ்லாந்து, பின்லாந்து, நார்வே ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களை வகிக்கின்றன. நமீபியா, பிரிட்டன், நியு சிலாந்து, ஸ்வீடன், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, அயர்லாந்து ஆகிய நாடுகள் 4 முதல் 10 வரையிலான இடங்களில் உள்ளன. ஆஸ்திரேலியா முதல்முறையாக முதல் 10 இடங்களுக்குள் வந்துள்ளது.*

*(iii) இந்தியா கடந்தாண்டை போலவே இந்தாண்டும் 131-ஆவது இடத்தில் நீடிக்கிறது. இந்தியாவுக்கு பின்னர் 14 நாடுகள் உள்ளன. அதாவது பப்புவா நியூ கினியா, குவைத், ஓமன், கத்தார், தஜிகிஸ்தான், சவூதி அரேபியா, எகிப்து, மொராக்கோ, மாலி, அல்ஜீரியா, காங்கோ உள்ளிட்ட நாடுகள் உள்ளன. சாட்நாடுகடைசிஇடத் தில் உள்ளது. ஈரானும், பாகிஸ்தானும் 143, 144 ஆவது இடங்களை வகிக்கின்றன.*

*(iv) இந்தியாவை பொறுத்தமட்டில் கடந்த 2006-ஆம் ஆண்டு நிலவரத்துடன் ஒப்பிடும் போது தற்போது நிலைமை மேம்பட்டுள்ளது. பாலின இடைவெளி விகிதம் 4.3 சதவீதம் முன்னேற்றம் கண்டுள்ளது. தொழில் மற்றும் தொழில்நுட்ப பணிகளில் 2 மடங்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2006-இல் 26.6 சதவீதமாக இருந்த இந்த அளவு 2026-இல் 49.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.*

*(v) மக்கள் பிரதிநிதிகள், மூத்த அதிகாரிகள், மேலாளர்கள் போன்ற பதவிகளிலும் 2006-ஆம் ஆண்டு நிலவரத்துடன் ஒப்பிடும்போது தற்போது 10 சதவீத புள்ளிகள் மேம்பட்டுள்ளது. கல்வித் தகுதி சார்ந்த துணை குறியீட்டில், இந்தியா 96.6 சதவீத மதிப்பெண்ணை பதிவு செய்துள்ளது. எனினும் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 0.5 சதவீதம் குறைவாகும். ஆரோக்கியம் மற்றும் உயிர் வாழ்வு தொடர்பான பிரிவில், இந்தியா கடந்த ஆண்டை விட இந்தாண்டு முன்னேற்றம் கண்டு 95.6 சதவீத சமநிலையை எட்டியது.*

*(vi) நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை எடுத்து கொண்டால், 2026- ஆம் ஆண்டில் பாலின இடைவெளி 16.1 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இது 2006-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 7 சதவீதம் அதிகமாகும். பொருளாதாரத்தில் உலக அளவில் பெண்களின் பங்களிப்பு 2022-இல் மிக அதிகமாக இருந்தது. அது தற்போது 2016-ஆம் ஆண்டில் இருந்த நிலைக்கு பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.*

*10. விவசாயம் சார்ந்த சிக்கல்களும் தீர்வுகளும்*

*(i) விவசாயத்தின் பொருளாதார முக்கியத்துவம்*

- *2024–25 நிதியாண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) விவசாயத் துறையின் பங்கு சுமார் 18% ஆக இருந்தது.*
- *நாட்டின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோருக்கு வாழ்வாதாரம் அளிக்கும் விவசாயம், கிராமப்புறப் பொருளாதாரத்தின் அடித்தளமாகத் திகழ்கிறது.*
- *விவசாயத் துறையின் வளர்ச்சி, ஒட்டுமொத்த தேசியப் பொருளாதார மேம்பாட்டையும் கிராமப்புற செழிப்பையும் நேரடியாக ஊக்குவிக்கிறது.*

*(ii) இந்திய விவசாயம் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள்*

- *விவசாய நிலங்கள் சிறிய, துண்டிக்கப்பட்ட நிலப்பகுதிகளாகப் பிரிக்கப்படுவது அதிகரித்து வருகிறது; இது உற்பத்தித் திறனைக் குறைப்பதோடு, 'ஹேண்ட் டிராக்டர்' (hand tractor) போன்ற நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவதையும் கட்டுப்படுத்துகிறது.*
- *கணிக்க முடியாத மழைக்காலங்கள், பருவமழை பொய்த்தல், பருவமல்லாத கனமழை மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை ஆகியவை பயிர்களுக்குக் கடுமையான சேதத்தையும் விவசாயிகளுக்குப் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்துகின்றன.*
- *அடிக்கடி ஏற்படும் வெள்ளம், பூச்சித் தாக்குதல்கள் மற்றும் பயிர் நோய்கள் ஆகியவை பயிர் விளைச்சலைப் பெருமளவு பாதிக்கின்றன.*
- *தங்கள் உழைப்பு மற்றும் இடுபொருள் செலவுகளுக்கு ஏற்ற வருமானம் கிடைக்காததால், விவசாயிகள் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கின்றனர்.*
- *போதுமான பயிர் உற்பத்தி இருந்தபோதிலும், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் சேமிப்பு உள்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாததால் கணிசமான அளவு உணவு வீணாகிறது.*

*(iii) பயிர் சார்ந்த மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்*

- ஒட்டுமொத்த பருத்தி விளைச்சல் அதிகமாக இருந்தாலும், உயர்தரப் பருத்தியை உற்பத்தி செய்வதில் கடுமையான சிக்கல்கள் உள்ளன; இது ஏற்றுமதி வருவாயைக் குறைக்கிறது.
- பருவமழை முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உளுந்து உற்பத்தியைப் கடுமையாகப் பாதித்துள்ளன; அதேவேளையில் சிறுதானியங்களின் (சோளம்/கம்பு/கேழ்வரகு போன்றவை) உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ளதால், பருப்பு வகைகளின் சந்தை விலை உயர்ந்துள்ளது.
- அதிகரித்து வரும் சூரியக் கதிர்வீச்சு, அண்டார்டிக் பனி உருகுதல் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவை விவசாயத்தை உலகளாவிய காலநிலை அபாயங்களுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய துறையாக மாற்றியுள்ளன.

(iv) அறிவியல் தீர்வுகள் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

- ஜனவரி 2025-இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய ஆராய்ச்சிகளின் மூலம் 386 மேம்படுத்தப்பட்ட பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டன; இவற்றில் 94% ரகங்கள் காலநிலை மாற்றங்கள் மற்றும் பூச்சித் தாக்குதல்களைத் தாங்கி வளரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- தக்காளி, கத்தரிக்காய் மற்றும் வெண்டைக்காய் போன்ற அத்தியாவசிய காய்கறிகளுக்கு அதிக விளைச்சல் தரும், வெப்பத்தைத் தாங்கும் மற்றும் நோய்களை எதிர்க்கும் திறன் கொண்ட ரகங்களை விஞ்ஞானிகள் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளனர்.
- உள்நாட்டு நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, சிறிய நிலப்பகுதிகளிலும் ஒரு குறிப்பிட்ட பரப்பளவிற்கான உற்பத்தியை அதிகப்படுத்துவதில் விவசாய ஆராய்ச்சி கவனம் செலுத்துகிறது.

(v) இயற்கை மற்றும் அங்கக விவசாய முன்னெடுப்புகள்

- 'பூஜ்ஜியச் செலவு இயற்கை விவசாயம்' (Zero-Budget Natural Farming) மற்றும் அங்கக உரங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்படுகிறது.
- 2024–25 நிதியாண்டில், 19 மில்லியன் டன்கள் என்ற இயற்கை உர உற்பத்தி அல்லது பயன்பாட்டு இலக்குக்கு எதிராக, உண்மையில் 7 மில்லியன் டன்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன.
- இயற்கை உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க ₹8,300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) நிதி ஒதுக்கீடுகள், மானியங்கள் மற்றும் இயந்திரமயமாக்கல்

- விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த, இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) மூலம் விவசாய ஆராய்ச்சிக்காக ₹8,300 கோடி முதலீடு செய்யப்படுகிறது.
- 2026–27 ஆம் ஆண்டிற்கான விவசாய மின்மயமாக்கல் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்கலுக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் ₹4,636 கோடியிலிருந்து ₹9,266 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளன.
- 2026–27 ஆம் ஆண்டிற்கான உணவு, உரம் மற்றும் ஆற்றல் சார்ந்த மானியங்கள் ₹4.1 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது; இது நாட்டின் மொத்த மானியச் செலவினங்களில் கிட்டத்தட்ட பாதியாகும்.
- கிராமப்புற ஆற்றல் பயன்பாடு மற்றும் பண்ணை இயந்திரமயமாக்கல் ஆகியவை இன்னும் இலக்குகளை எட்டவில்லை என்பதால், இவற்றைச் செயல்படுத்த சீரான கட்டமைப்புகள் தேவைப்படுகின்றன.

(vii) எதிர்கால வளர்ச்சிக்கான உத்திசார் வரைபடம்

- உணவு வீணாவதைத் தவிர்க்க, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, திறமையான உணவு பதப்படுத்துதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றின் மீது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
- மானியங்கள் நிலையானதாகவும், திறமையானதாகவும், உண்மையான விவசாயப் பயனாளிகளுக்கு நேரடியாகக் கிடைப்பதாகவும் இருக்க வேண்டும்.
- குறைந்த நிலப்பரப்பில் அதிக பயிர் விளைச்சலைப் பெற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதே நிலையான விவசாய வளர்ச்சிக்கான முதன்மை இலக்காக உள்ளது.

11. மாசுபட்ட ஆறுகள்

(i) வரலாற்றுச் சிறப்புமிக்க மதிப்பும் தற்போதைய யதார்த்தமும்

- இந்திய மரபில், கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதை மற்றும் தப்தி போன்ற ஆறுகள்

புனிதமான அன்னையர்களாகவும், வாழ்வளிப்பவர்களாகவும் வரலாற்று ரீதியாகப் போற்றப்பட்டு வருகின்றன.

- நவீன நகரமயமாக்கல், மக்கள் தொகை நெருக்கடி மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவை இந்த முக்கிய நீர்நிலைகளை கழிவுகளைக் கொட்டும் இடங்களாக மாற்றி, கடுமையான சுற்றுச்சூழல் நெருக்கடியை உருவாக்கியுள்ளன.

*(ii)* இந்தியாவில் ஆற்று நீர் மாசுபாட்டின் அளவு

- மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) கண்காணிப்புத் தரவுகளின்படி, இந்தியா முழுவதும் கண்காணிக்கப்பட்ட 603 ஆறுகளில் 311 ஆற்றுப் பகுதிகள் மாசுபட்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- சுத்திகரிக்கப்படாத நகராட்சி கழிவுநீர் தினமும் சுமார் 3,300 மில்லியன் லிட்டர் (MLD) அளவில் நேரடியாக ஆறுகளில் கலக்கிறது.
- முக்கிய நகரங்கள் மற்றும் பேரூராட்சிகளில் உருவாகும் கழிவுநீரில் 50%-க்கும் அதிகமானவை, முறையான சுத்திகரிப்பு இன்றி அருகிலுள்ள ஆறுகளில் கலக்கின்றன.

*(iii)* மாசுபாட்டிற்கான முக்கிய காரணங்கள்

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்படாத வீட்டு உபயோகக் கழிவுநீரே ஆறுகளின் சீரழிவுக்கு மிகப்பெரிய காரணமாக உள்ளது.
- தொழிற்சாலைகள், தோல் பதனிடும் நிலையங்கள் மற்றும் ஜவுளி பதப்படுத்தும் அலகுகளிலிருந்து முறையான சுத்திகரிப்பு இன்றி வெளியேற்றப்படும் அபாயகரமான ரசாயனங்கள், கன உலோகங்கள் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த திரவக் கழிவுகள்.
- விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அதிகப்படியான ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் மழையின் போது ஆற்றுப் படுகைகளில் அடித்துச் செல்லப்படுகின்றன.
- மட்காத ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள், வீட்டுக் குப்பைகள் மற்றும் வழிபாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை ஆற்றில் கொட்டுவது ஆற்றுப் பாதைகளை அடைப்பதோடு நீரின் தரத்தையும் குறைக்கிறது.

*(iv)* சமூக-பொருளாதார, சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- மாசுபட்ட ஆற்று நீர் காலரா, வயிற்றுப்போக்கு, டைபாய்டு மற்றும் ஹெபடைடிஸ் போன்ற பரவலான நீர் மூலம் பரவும் நோய்களுக்கு வழிவகுக்கிறது; இது ஆற்றங்கரையோரம் வசிக்கும் குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களை அதிகளவில் பாதிக்கிறது.
- நீரில் கரைந்துள்ள ஆக்சிஜன் (DO) அளவு குறைவதால், பெருமளவில் மீன்கள் இறப்பதோடு நன்னீர் பல்லுயிர் பெருக்கமும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.
- விவசாயப் பாசனத்திற்கு மாசுபட்ட ஆற்று நீரைப் பயன்படுத்துவது மண்ணில் கன உலோகங்கள் சேர்வதற்கும், அருகிலுள்ள நிலத்தடி நீர் ஆதாரங்கள் மாசுபடுவதற்கும் வழிவகுக்கிறது.

*(v)* அரசின் முன்னெடுப்புகள் மற்றும் நிதி ஒதுக்கீடு

- கங்கை நதியை மீட்டெடுத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை (STP) அமைத்தல் மற்றும் ஆற்றங்கரைப் பகுதிகளை நிர்வகித்தல் ஆகியவற்றிற்காக மொத்தம் ₹ 32,500 கோடி முதல் ₹ 42,500 கோடி வரையிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தேசிய நதி பாதுகாப்புத் திட்டம் (NRCP): கங்கை அல்லாத முக்கிய நதிகளில், நீரை இடைமறித்தல், திசைதிருப்புதல் மற்றும் சுத்திகரிப்பு உள்கட்டமைப்புகளை நிறுவுவதற்காக, பல்வேறு மாநிலங்களில் ₹ 79,000 கோடிக்கும் மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- சட்டப்பூர்வ அமலாக்கமானது, 1974 ஆம் ஆண்டின் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1986 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தைச் சார்ந்துள்ளது.

*(vi)* முக்கிய அமலாக்கச் சவால்கள் மற்றும் முன்னோக்கிய வழி

- தற்போதுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு (STP), தினசரி மொத்தக் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் திறன் இல்லை. மேலும், செயல்பாட்டில் உள்ள பல நிலையங்கள் மோசமான பராமரிப்பால்

பாதிக்கப்பட்டுள்ளன.

- ஒழுங்குமுறை அமைப்புகள், பூஜ்ஜிய திரவக் கழிவு வெளியேற்ற (ZLD) தரநிலைகளைக் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் மற்றும் இணங்காத தொழிற்சாலைகளுக்கு அபராதம் விதிக்க வேண்டும்.
- நீண்டகால மறுசீரமைப்பிற்கு, பொதுமக்களின் தீவிரப் பங்கேற்பு, திடக்கழிவுகளைக் கொட்டுவதை நிறுத்துதல் மற்றும் உள்ளூர் நதிச் சூழல் அமைப்புகள் மீதான சமூகப் பொறுப்புணர்வை மீட்டெடுத்தல் ஆகியவை தேவைப்படுகின்றன.